**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PUDUKKOTTAI.**

**CC.No. 174/2022**

| | | |
|---|---|---|
| **Deposition Witness** | **அ.சா. 4** | **Caste** |
| **Witness Name** | **பரமசிவம்** | **Calling** |
| **Father's Name** | | **Religion** |
| **Village** | | **Age** |
| **Taluk** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05 .06.2023.

**( எதிரி ஆஜரில்லை ).**

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் உச்சாணி, புத்தாம்பூரில் வசித்து கடிகார கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். விபத்தில் இறந்த முத்துக்கருப்பன் எனது அக்கா மகன் ஆகும். குமார் பட்டாணி கடை அருகே பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அவரை மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்க சிகிச்சைக்கு அழைத்துச் சென்ற போது வழியிலேயே இறந்து விட்டதாக அவரை மருத்துவமனையில் பரிசோதித்த மருத்துவர்கள் சொன்னதாக எனக்கு எனது உறவினர்கள் தொலைபேசியில் எனக்கு தகவல் சொன்னார்கள். நான் மருத்துவமனை சென்று பார்த்தேன். போலீசார அங்கிருந்தார்கள். விபத்து பற்றி கேட்க எனக்கு தெரிந்து விபரங்களை நான் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை** – வாய்ப்பளித்தும் இல்லை.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PUDUKKOTTAI.**

**CC.No. 174/2022**

| | | |
|---|---|---|
| **Deposition Witness** | அ.சா. 3 | **Caste** |
| **Witness Name** | சுரேஷ் | **Calling** |
| **Father's Name** | முத்தையா | **Religion** |
| **Village** | | **Age** |
| **Taluk** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05 .06.2023.

**( எதிரி ஆஜரில்லை ).**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் சமத்துவபுரத்தில் வசித்து பேக்கரி வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 02.09.2022ம் தேதி இரவு சுமார் 11.00 மணியளவில் தெற்கு ராஜவிதியும், மேல ராஜ வீதியும் சந்திக்கும் இடத்தில் உள்ள குமார் பட்டாணி கடை அருகே நான் எனது நண்பர்கள் சரவணக்குமார், சுரேஷ் ஆகியோருடன் விநாயகர் ஊர்வலத்திற்கு சென்றுவிட்டு, திரும்ப வந்து பேசிக் கொண்டிருந்தபோது, அப்போது தெற்கு ராஜவீதியில் முத்துக்குருப்பனும், சீனிவாசனும் Splender plus இரு சக்கர வாகனத்தில் சென்று, மேல ராஜ வீதி கார்னரில் திரும்பினார்கள். மேல ராஜ வீதி தெற்குப் புறம் இருந்து அரசுப் பேருந்து வடக்கு நோக்கி சென்று முன்னால் சென்ற இரு சக்கர வாகனத்தின் மீது மோதியதில் இரு சக்கர வாகனத்தில் சென்றவர்கள் மீது பேருந்து ஏறி இறங்கியது. அதில் சீனிவாசனுக்கு வலது பக்க தோள்பட்டையில் பலத்த காயம் ஏற்பட்டது. முத்துக்கருப்பனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. பின்னர் ஆமபுலன்ஸ் மூலம் இருவரையும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். விபத்திற்கு காரணம் அரசுப் பேருந்து வேகமாக வந்து மோதியதே ஆகும். பேருந்தை வழித்தடம் இல்லாத இடத்தில் ஓட்டுநர் இயக்கியதால் விபத்து ஏற்பட்டது. பேருந்து ஓட்டுநரை பார்த்தால் அடையாளம் காண்பிக்க இயலும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை** – வாய்ப்பளித்தும் இல்லை

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PUDUKKOTTAI.**

**CC.No. 174/2022**

| | | |
|---|---|---|
| **Deposition Witness** | அ.சா. 2 | **Caste** |
| **Witness Name** | ஆனந்தன் | **Calling** |
| **Father's Name** | கருப்பையா | **Religion** |
| **Village** | | **Age** |
| **Taluk** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05 .06.2023.

**( எதிரி ஆஜரில்லை ).**

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் வாகவாசலில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 02.09.2022ம் தேதி இரவு சுமார் 11.00 மணியளவில் தெற்கு ராஜவிதியும், மேல ராஜ வீதியும் சந்திக்கம் இடத்தில் உள்ள குமார் பட்டாணி கடை அருகே நான் எனது நண்பர்கள் சரவணக்குமார், சுரேஷ் ஆகியோருடன் விநாயகர் ஊர்வலத்திற்கு சென்றுவிட்டு, திரும்ப வந்து பேசிக் கொண்டிருந்தபோது, அப்போது தெற்கு ராஜவீதியில் முத்துக்குருப்பனும், சீனிவாசனும் Splender plus இரு சக்கர வாகனத்தில் சென்று, மேல ராஜ வீதி கார்னரில் திரும்பினார்கள். மேல ராஜ வீதி தெற்குப் புறம் இருந்து அரசுப் பேருந்து வடக்கு நோக்கி சென்று முன்னால் சென்ற இரு சக்கர வாகனத்தின் மீது மோதியதில் இரு சக்கர வாகனத்தில் சென்றவர்கள் மீது பேருந்து ஏறி இறங்கியது. அதில் சீனிவாசனுக்கு வலது பக்க தோள்பட்டையில் பலத்த காயம் ஏற்பட்டது. முத்துக்கருப்பனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. பின்னர் ஆமபுலன்ஸ் மூலம் இருவரையும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். விபத்திற்கு காரணம் அரசுப் பேருந்து வேகமாக வந்து மோதியதே ஆகும். பேருந்து ஓட்டுநரைப் பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க இயலும். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை** – வாய்ப்பளித்தும் இல்லை

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.I, PUDUKKOTTAI.**

**CC.No. 174/2022**

| | | |
|---|---|---|
| **Deposition Witness** | **அ.சா. 1** | **Caste** |
| **Witness Name** | **மணிகண்டன்** | **Calling** |
| **Father's Name** | **முருகேசன்** | **Religion** |
| **Village** | | **Age** |
| **Taluk** | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05 .06.2023.

**( எதிரி ஆஜரில்லை ).**

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் மேல 4ம் வீதியில் வசித்து சிங்கப்பூரில் வேலை செய்து வந்தேன். கடந்த 02.09.2022ம் தேதி இரவு சுமார் 11.45 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது சரவணக்குமார் என்பவர் என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு, புதுக்கோட்டை

மேல ராஜவீதியின், தெற்கு ராஜவீதி சந்திக்கும் இடத்தில் குமார் பட்டாணி கடை அருகே எனது தம்பியும், அவரது நண்பர் சீனிவாசனும் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாகக் கூறினார்கள். உடனே நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது, எனது தம்பி முத்துக்கருப்பனுக்கு தலையின் பின்புறம் அடிபட்டு, பலத்த இரத்த காயம் ஏற்பட்டிருந்தது. எனது தம்பியின் நண்பர் சீனிவாசனுக்கு பேருந்து ஏறி இறங்கியதில் பலத்த காயம் ஏற்பட்டது. சீனிவாசனின் வீட்டிற்கு தகவல் சொல்லி விட்டு, ஆம்புலன்ஸ் மூலம் இருவரையும் புதுக்கோட்டை அரசு மருத்துமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு இருவரையும் பரிசோதித்த மருத்துவர்கள் இருவரும் இறந்துவிட்டதாகக் கூறினார்கள். அவர்களின் பிரேதங்களை சவக்கிடங்கிற்கு அனுப்பினார்கள். விபத்து ஏற்படுத்திய நபர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் அசா. 1 ஆகும்.** பின்னர் எனது தம்பியின் பிரேதத்தை நான் அடையாளம் காண்பித்தேன். போலீசார் என்னிடம் விசாரணை மேற்கொண்டார்கள்.

**குறுக்கு விசாரணை** – வாய்ப்பளித்தும் இல்லை